மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
புதுச்சேரி

# ஊரக வேலை வாய்ப்பு உறுதித்திட்டப் பணியாளர்கள் தேர்வு செய்ய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித்திட்டத்தின்கீழ் புதுச்சேரி மாவட்டத்தில் கனுவாப்பேட்டை மற்றும் சோரியாங்குப்பம் கிராம பஞ்சாயத்தில் காலியாக உள்ள "கிராம வேலை வாய்ப்பு உறுதித்திட்டப் பணியாளர்களை (GRS)" நியமிப்பதற்காக தகுதியுடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் புதுச்சேரி மாவட்டத்தைச் சேர்ந்த ஊரகப்பகுதியில் மேற்கூறிய கனுவாப்பேட்டை மற்றும் சோரியாங்குப்பம் கிராமங்கள் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமப்பகுதியில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். பணி நியமனம் தற்காலிகமானது. மாத தொகுப்பு ஊதியம் ரூ.7500 மட்டும் (ரூபாய் ஏழாயிரத்து ஐந்நூறு மட்டும்) விண்ணப்பதாரர்கள் மேல்நிலை வகுப்பில் (HSc.) அல்லது (10+2) தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும். வயது வரம்பானது 45 வயதுக்கு மிகாமல் இருக்கவேண்டும்.

2. மேலே குறிப்பிட்ட "கிராம வேலை வாய்ப்பு உறுதித்திட்டப் பணிக்கு (GRS)" விண்ணப்பிக்க விருப்பமுள்ளவர்கள் ஒரு முழு வெள்ளைத்தாளில் கீழே கொடுக்கப்பட்டுள்ளபடி விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து "திட்ட அதிகாரி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, 2வது தளம், புதுச்சேரி வீட்டு வசதி வாரிய கட்டிடம், அண்ணா நகர், நெல்லித்தோப்பு, புதுச்சேரி – 605 005" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். அஞ்சல் உறை மீது "கிராம வேலை வாய்ப்பு உறுதித்திட்டப் பணியாளர் தேர்வுக்கான விண்ணப்பம் (GRS)" என்று குறிப்பிட வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய கடைசி நாள் 30.12.2015 மாலை 4.00 மணி. தாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

3. பெறப்பட்ட விண்ணப்பங்கள் கிராம பஞ்சாயத்துவாரியாக பிரிக்கப்பட்டு விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.